**செ.வெ.எண்: 47** **நாள்: 19.11.2021**

**நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.11.2021) ஆய்வு செய்தார்.**

நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.11.2021) ஆய்வு செய்தார்.

நாகப்பட்டினம் நகராட்சிக்கு உட்பட்ட புதிய நம்பியார் நகரில் உள்ள தாழ்வான இடங்களில் கனமழையால் தேங்கியுள்ள மழைநீரை மோட்டார் மூலம் வெளியேற்றும் பணியை விரைந்து முடிக்க நகராட்சிக்கு உத்தரவிட்டு, இப்பகுதியில் அடிப்படை வசதிகள் குறித்து நகராட்சி மற்றும் ஊராட்சி உடன் நடவடிக்கை எடுக்குமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் கருவேலங்கடை ஊராட்சியில் உள்ள விலை நிலங்கள் மற்றும் பனங்குடி ஊராட்சி மேலவாஞ்சூர் அமிர்தா நகரில் கனமழையால் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பணியை மேற்கொள்ளவும், கருவேலங்கடை வாய்க்காலை தூர்வாரி, வடிகால் கட்டி மற்றும் அடைப்புபலகை அமைத்திட பொதுப்பணித்துறைக்கு அறிவுறுத்தினார். பனங்குடியில் உள்ள நரிக்குறவர் காலணிக்கு போதுமான அடிப்படை வசதிகளை சம்மந்தபட்ட அரசுதுறை அலுவலர்களால் செய்து தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்து ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஒரத்தூர் ஊராட்சியில் உள்ள சிதம்பரனார் நடுநிலைப்பள்ளியில் பாப்பாகோவில், கருவேலங்கடை, ஆபரணதாரி, பொன்வெளி, ஒரத்தூர் ஆகிய ஊராட்சிகளின் விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் நிலப்பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் நடைபெற்ற சிறப்பு முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது நகராட்சி ஆணையர் திருமதி.ஸ்ரீதேவி, வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.மணிவேலன், கீழ்வேளூர் வட்டாட்சியர் திருமதி.அமுதா, நாகப்பட்டினம் வட்டாட்சியர் திரு.ஜெயபால், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.பாண்டியன், உதவி பொறியாளர் திரு.கமலக்கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**